## 137. எங்கள் மேலே ஊற்றுங்க

### பல்லவி

எங்க மேல ஊற்றுங்க ஆவியானவரே
எங்க மேல ஊற்றுங்க உம் ஆவிய

### அனுபல்லவி

மாம்சமான யாவர் மேலும்
ஊற்றுவேன் என்றீர்
எங்கள் மேலே ஊற்றுங்க உம் ஆவிய

### சரணங்கள்

1. பெந்தேகோஸ்தே நாளினிலே
மேல்வீட்டு அறையினிலே
சீஷர்கள் மேல் ஊற்றினீரே
எங்க மேல் ஊற்றிடுங்க
- மாம்சமான யாவர்

2. கொர்நேலியு வீட்டினிலே
புறஜாதி மக்கள் மேலே
வல்லமையின் ஆவி ஊற்றினீரே
எங்க மேலே ஊற்றிடுங்க
- மாம்சமான யாவர்

3. எபேசு பட்டணத்தில்
பனிரெண்டு சீஷர்மேலே
வல்லமையின் ஆவி ஊற்றினீரே
எங்க மேல ஊற்றிடுங்க
- மாம்சமான யாவர்

4. வறண்ட நிலத்தின் மேலே
தண்ணீரை ஊற்றிடுவீர்
வறட்சியான என் வாழ்வினிலே
உம் ஆவியை ஊற்றிடுங்க
- மாம்சமான யாவர்